பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

28 02 2025 **FRIDAY** 7 15 **AM**

ஆகாஷவாணி - செய்திகள் - வாசிப்பவர் - சுமித்ரா ரத்னம்

தலைப்புச் செய்திகள்

- ஆடை வடிவமைப்பு துறையில் நவீன தொழில்நுட்பங்கள் மூலம் சாதனை படைக்க முடியும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரெளபதி முர்மு கூறியுள்ளார்.
- ஐரோப்பிய யூனியன் தலைவர் திருமதி. **Ursula Vonderlyn,** பிரதமர் திரு நரேந்திர மோடியை, புதுதில்லியில் இன்று சந்தித்துப் பேசவுள்ளார்.
- துறைமுகங்களை நவீனமயமாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.
- தேசிய அறிவியல் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.
- வதோதராவில் நடைபெற்று வரும் இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Punit Biswas** பட்டம் வென்றார்

**<<<<>>>>**

ஆடை வடிவமைப்பு துறையில் நவீன தொழில்நுட்பங்கள் மூலம் சாதனை படைக்க முடியும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரெளபதி முர்மு கூறியுள்ளார்

குஜராத் மாநிலம், அஹமதாபாதில் தேசிய ஆடை வடிவமைப்பு நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், சர்வதேச அளவில் இத்துறையில் கடும் போட்டி நிலவிவரும் சூழலிலும், புதிய யுக்திகளை பயன்படுத்துவதன் மூலம் அவற்றை எளிதில் எதிர்கொள்ளலாம் என்றும் தெரிவித்தார்.

நமது பாரம்பரிய திறன்கள் மூலம், நம் நாட்டிற்கு மட்டுமன்றி, உலக அளவிலான தேவைகளுக்கும் பங்களிக்க முடியும் என்றும் திருமதி. திரெளபதி முர்மு கூறினார்.

**<<<<>>>>**

ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் திருமதி ஊர்சுலா வொன்டர் லெய்ன் பிரதமர் திரு நரேந்திர மோடியை புதுதில்லியில் இன்று சந்தித்துப் பேசவுள்ளார்.

இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையிலான பேச்சுக்கள் இந்த சந்திப்பில் இடம்பெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வர்த்தகம், முதலீடு, பருவநிலை மாற்றம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல துறைகளில் இந்தியாவுக்கும் ஐரோப்பிய யூனியனுக்கும் இடையில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்தும், இந்த பேச்சு வார்த்தைகளின்போது ஆலோசிக்கப்படும் என தெரிகிறது.

முன்னதாக இரண்டு நாள் பயணமாக நேற்று தில்லி வந்த திருமதி ஊர்சுலா, வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கருடன் ஆலோசனை நடத்தினார்.

<<<<>>>>

நடப்பு நிதியாண்டில் தகவல் தொழில்நுட்பத்துறை 282 பில்லியன் டாலர் வருவாயை ஈட்டியுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

தகவல் தொழில்நுட்பம் தொடர்பான நாஸ்காம் கூட்டத்தில் காணொலி வாயிலாக உரையாற்றிய அவர், 5 புள்ளி எட்டு மில்லியன் வேலைவாய்ப்பு கிடைத்துள்ளதாகவும், காப்புரிமை கோரி 90 ஆயிரம் பேர் பதிவு செய்துள்ளதாகவும், 224 பில்லியன் டாலர் அளவுக்கு ஏற்றுமதி நடைபெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மகராஷ்டிராவில் வன உரிமைச் சட்டத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அம்மாநில ஆளுநர் திரு சி.பி. ராதாகிருஷ்ணன் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து மும்பையில் மூத்த அரசு அதிகாரிகளுடன் நேற்று அவர் ஆலோசனை நடத்தினார். இந்தச் சட்டத்தை அமல்படுத்தும்போது பழங்குடியினர் நலனுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

பழங்குடியின மாணவர்களுக்கான உண்டு உறைவிட பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிப்பது, சிக்கில் செல் அனிமியா நோய்க்குத் தீர்வு போன்றவை குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

துறைமுகங்களை நவீனமயமாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

ஒரே நாடு - ஒரே துறைமுக நடைமுறைகள் தொடர்பான இணையதளத்தை மும்பையில் நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், துறைமுகங்கள் மற்றும் சரக்கு கையாளும் திறனை மேம்படுத்த கடந்த பத்தாண்டுகளாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் எடுத்துரைத்தார்.

கடல் சார் சீர்திருத்தங்கள், வெளிப்படைத்தன்மையை அதிகரித்துள்ளதோடு சிறந்த நிர்வாகத்தையும் உறுதி செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

துறைமுகங்களின் செயல்பாட்டை சர்வதேச தரத்தில் மேம்படுத்த அரசு முயற்சி மேற்கொண்டு வருவதாகவும், இதற்கு இத்துறையினர் முழுஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் திரு சர்பானந்த சோனாவால் கேட்டுக் கொண்டார்.

**<<<<>>>>**

ஆதார் அடிப்படையிலான தகவல் சரிபார்ப்பு செயல்முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கானு இணையதளத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.

தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த இணையதளத்தை அத்துறைக்கான செயலாளர் திரு கிருஷ்ணன் தொடங்கி வைத்தார்.

இந்த தளம் ஆதார் தொடர்பான நடைமுறைகளை எளிதாக்குவதற்கும், மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்கும் பயன்படும் என்று தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய தனித்துவ அடையாள ஆணையத்தின் தலைமைச் செயல் அதிகாரி திரு புவனேஷ்குமார், ஆதார் நடைமுறைகளால் நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரமும் நிர்வாகமும் மேம்பட்டுள்ளதாக கூறினார்.

**<<<<>>>>**

தேசிய அறிவியல் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி சர் சி.வி.ராமன், ராமன் விளைவைக் கண்டுபிடித்ததை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 28-ம் தேதி இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான அறிவியல் கண்டுபிடிப்புகளில் இளைஞர்களின் பங்கு என்ற கருப்பொருளில் இந்த ஆண்டு தேசிய அறிவியல் தினம் கொண்டாடப்படுகிறது.

இந்த தினத்தையொட்டி நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை ஏற்பாடு செய்துள்ளது.

தில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் பங்கேற்கிறார்.

<<<<>>>>

பீகாரில் தர்பங்கா, சமஸ்திபூர், சரண் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இன்று அதிகாலை நில அதிர்வு உணரப்பட்டது.

அதிகாலை 2.37 மணிக்கு நிலநடுக்கம் உணரப்பட்டதாகவும் இதனால் பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேறியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரிக்டர் அளவில் 5 புள்ளி ஐந்தாக பதிவான இந்த நிலநடுக்கம், மேற்குவங்கம், சிக்கிம் மாநிலங்களிலும் உணரப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

சத்திஷ்கர் மாநிலம், பிஜப்பூரில் 18 நக்ஸலைட்டுகளை பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து வெடிகுண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தின் நீலகிரி மாவட்ட வனப்பகுதிகளில் பாறு கழுகுகள் கணக்கெடுக்கும் பணி தொடங்கியுள்ளது.

தமிழக – கேரள – கர்நாடக எல்லைப்பகுதிகளில் நேற்று முதல் இரண்டு நாட்களுக்கு இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சரவணன் 49 செகண்ட்ஸ்)

<<<<>>>>

ஹிமாச்சல பிரதேசத்தின் மலைப் பகுதிகளில் கடும் பனிப்பொழிவு நீடிப்பதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

சிம்லா மாவட்டத்தில் மொத்தம் 12 சாலைகள் மூடப்பட்டுள்ளன. சம்பா, கின்னார் உள்ளிட்ட பகுதிகளில் பனிச்சரிவு குறித்து வானிலை ஆய்வு மையம் ஆரஞ்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பனிச்சரிவு ஏற்படக்கூடிய உயரமான பகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே, அம்மாநிலத்தின் சில இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், உத்ராகண்ட் மற்றும் தமிழகத்தின் சில இடங்களிலும் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**<<<<>>>>**

புகழ்பெற்ற ஒடியா திரைப்பட நடிகர் உத்தம் மொஹந்தி உடல்நலக்குறைவால் நேற்று குருகிராமில் காலமானார்.

அவருக்கு வயது 66. ஒடியா திரையுலகில் தலைசிறந்த நடிகராகத் திகழந்த அவர் 130 க்கும் மேற்பட்ட ஒடியா, 30 பெங்காலி திரைப்படங்களிலும் நடித்துள்ளார்.

அவரது மறைவுக்கு ஒடிசா முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஜி, மத்திய அமைச்சர்கள் திரு ஜுவல் ஓரம், திரு தர்மேந்திர பிரதான் உள்ளிட்டோரும் திரை உலகினரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**<<<<>>>>**

காஸா போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பான இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை எகிப்தின் கெய்ரோவில் தொடங்கியுள்ளது.

இஸ்ரேல், கத்தார் மற்றும் அமெரிக்க அதிகாரிகள் இதில் பங்கேற்றுள்ளதாக எகிப்து அரசு தெரிவித்துள்ளது.

போர் நிறுத்தத்தை நீட்டிப்பது குறித்தும், காஸாவுக்கு மனிதாபிமான உதவிகளை அதிகரிப்பது தொடர்பாகவும் இதில் ஆலோசனை மேற்கொள்ளப்படுகிறது.

**<<<<>>>>**

வதோதராவில் நடைபெற்று வரும் இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Punit Biswas** பட்டம் வென்றார்.

நேற்று நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டோருக்கான இறுதியாட்டத்தில் இவர், 11-9, 8-11, 11-5, 8-11, 11-6 என்ற செட்கணக்கில் **Sahil Rawat** –ஐ வென்றார்.

**<<<<>>>>**

ஜெர்மன் ஓபன் பேட்மிண்டன் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவின் இந்தியாவின் துருவ் கபிலா - தனிஷா கிராஸ்ட்டோ இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், இந்த இணை 21-10, 21-19 என்ற செட்கணக்கில் ஜெர்மனின் **Jones Ralfy Jansen – Thuc Phuong Nguyen** இணையை வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Rakshitha Ramraj** மற்றும் உன்னத்தி ஹூடா காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<>>>>**

ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கோவா 1-0 என்ற கோல்கணக்கில் பஞ்சாபை வென்றது.

**<<<<>>>>**